# மார்ச்– 03– பொதுக்கால 08ம் ஞாயிறு

**"ஆண்டவரின் இல்லத்தில் நடப்பட்டோர் நம் கடவுளின் கோவில் முற்றங்களில் செழித்தோங்குவர" - திபா 92 : 13**

## முதல் வாசகம் : சீராக்கின் ஞானம் 27 : 4 –7

சலிக்கின்றபோது சல்லடையில் உமி தங்கிவிடுகின்றது. அவ்வாறே, மனிதரின் பேச்சில் மாசுபடிந்துவிடுகின்றது.குயவரின் கலன்களை, சூளை பரிசோதிக்கின்றது் மனிதரை, உரையாடல் பரிசோதிக்கப்படுகின்றது.கனி, மரத்தின் கண்காணிப்பைக் காட்டுகின்றது் சொல், மனிதரின் உள்ளப் பண்பாட்டைக் காட்டுகின்றது.ஒருவர் பேசுவதற்குமுன்பே அவரைப் புகழாதே் பேச்சைக் கொண்டே அவரை அறிந்து கொள்ளலாம்.

**பதில்பாடல் :** ஆண்டவருக்கு நன்றியுரைப்பது நன்று

## இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர்15 : 54 – 58

சகோதரர் சகோதரிகளே அழிவுக்குரியது அழியாமையையும், சாவுக்குரியது சாகாமையையும் அணிந்து கொள்ளும்போது மறைநூலில் எழுதியுள்ள வாக்கு நிறைவேறும் "சாவு முற்றிலும் ஒழிந்தது் வெற்றி கிடைத்தது. சாவே, உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே?" பாவமே சாவின் கொடுக்கு. பாவத்துக்கு வலிமை தருவது திருச்சட்டமே. ஆகவே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக நமக்கு இந்த வெற்றியைக் கொடுக்கும் கடவுளுக்கு நன்றி! எனவே என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, உறுதியோடு இருங்கள் நிலையாய் நில்லுங்கள். ஆண்டவருக்காக நீங்கள் உழைப்பது வீண் போகாது என்பதை அறிந்து ஆண்டவரின் பணியை இன்னும் அதிகமாக எப்போதும் செய்யுங்கள்.

## நற்செய்தி : லூக்கா 6 : 39 - 45

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களுக்கு உவமையாகக் கூறியது "பார்வையற்ற ஒருவர் பார்வையற்ற வேறொருவருக்கு வழிகாட்ட இயலுமா? இருவரும் குழியில் விழுவரல்லவா? சீடர் குருவைவிட மேலானவர் அல்ல. ஆனால் தேர்ச்சி பெற்ற எவரும் தம் குருவைப் போலிருப்பர். "நீங்கள் உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையைப் பார்க்காமல் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணில் இருக்கும் துரும்பைக் கூர்ந்து கவனிப்பதேன்? உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையையே நீங்கள் பார்க்காமல் இருந்து கொண்டு உங்கள் சகோதரர் அல்லது சகோதரியிடம், "உம் கண்ணில் இருக்கும் துரும்பை எடுக்கட்டுமா?" என்று எப்படிக் கேட்க முடியும்? வெளி வேடக்காரரே, முதலில் உங்கள் கண்ணில் இருக்கும் மரக் கட்டையை எடுத்து எறியுங்கள்.அதன்பின் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணில் இருக்கும் துரும்பை எடுக்க உங்களுக்குத் தெளிவாய்க் கண் தெரியும். "கெட்ட கனி தரும் நல்ல மரமுமில்லை் நல்ல கனி தரும் கெட்ட மரமுமில்லை. ஒவ்வொரு மரமும் அதனதன் கனியாலே அறியப்படும். ஏனென்றால் முட்செடிகளில் அத்திப் பழங்களைப் பறிப்பாருமில்லை் முட்புதர்களில் திராட்சைக் குலைகளை அறுத்துச் சேர்ப்பாரு மில்லை. நல்லவர் தம் உள்ளமாகிய நல்ல கருவூலத்திலிருந்து நல்லவற்றை எடுத்துக் கொடுப்பர். தீயவரோ தீயதினின்று தீயவற்றை எடுத்துக் கொடுப்பர். உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும்" என்றார்.

**தியானம்:** அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது பொன்மொழி. அகத்தின் அழகு நம் பேச்சில் இருக்கிறது என்கிறது விவிலியம். நல்லமரம் நல்லகனி கொடுக்கும். கெட்டமரம் கெட்டகனி கொடுக்கும். உள்ளத்தின் நிறைவையே வாய்பேசும் என்கிறார் ஆண்டவர். நமது வாயின் சொற்கள் நமது உள்ளத்தின் நிறைவை, அல்லது குறைவைச் சுட்டிக்காட்டுகின்றன. நமது சொற்கள் குறைவுள்ளவையாக, கண்ணியம் குறைந்தவையாக, இழிவானவையாக, புண்படுத்துவனவாக இருக்கின்றனவா? மனிதர்களும் இயற்கை அன்னையைப் போல தங்களின் வாழ்வால் மற்றவர்களுக்குக் கொடுத்து, அதில் நிறைவைக்காண அழைக்கப்படுகிறார்கள். எனவே, நாமும் மற்றவர்களுக்குக் கொடுப்பதற்காகவே, கொடுத்து வாழ்வதற்காகவே அழைக்கப்படுகிறோம். இன்றை நற்செய்தியும் இதனைத்தான் வேறுவார்த்தைகளில் சொல்கிறது. நாம் கொடுப்பது முதன்மையானதாக நல்லதாக மற்றவர்களுக்குப் பயன்படுவதாக இருக்கவேண்டும். எத்தனையோ மரங்கள் எதையெல்லாம் கொடுத்தாலும், நமக்குப் பயன்படக்கூடியதை மட்டும்தான், நாம் சாப்பிடுகிறோம். அதேபோல நாம் கொடுப்பது, மற்றவர்களுக்கு நிறைவைத் தரக்கூடியதாக அமைய வேண்டும். இயேசுவின் சீடர் நற்பண்பு மிக்க மனிதராக இருக்க வேண்டும் என்பது இயேசுவின் போதனை. நற்பண்புடையோர் உயர்வான எண்ணங்களையே எண்ணுவர் பிறருக்கு நலமானவற்றையே பேசுவர் பிறரின் நன்மையைக் கருத்தில்கொண்டே செயல்படுவர். எனவே, அவர்களின் எண்ணம், சொல், செயல் அனைத்தும் அவர்கள் உண்மையிலேயே எத்தன்மையவர் என்பதை எடுத்துக்காட்டும். நற்பண்புடைய மனிதர் உண்மையிலேயே சான்றோராக இருப்பார். அவர் இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு, அவற்றின்படி செயல்படுவார் (லூக்கா 6:47). இவ்வாறு இயேசுவின் சொற்களுக்குச் செவிமடுத்து, அவற்றிற்கேற்ப நம் வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்ள நாமும் அழைக்கப்படுகிறோம். அப்போது "உள்ளூரப் பழுத்த பயன் தரும் மரம்போல" நம் வாழ்வு அனைவருக்கும் நலன் தரும். இறை வார்த்தையை மேலோட்டமாகப் படித்து ஏனோதானோவென்ற மனநிலையோடு செயல்படுத்த முடியாது. மாறாக, இறைவார்த்தையின் ஆழத்திற்குள்ளாக நாம் சென்று இறைவார்த்தை நமக்கு வைத்திருக்கிற மறைபொருளை அறிய முற்படவேண்டும். அப்போது நமது வாழ்வு நிறைவானதாக இருக்கும்.